# மெட்ரோ ரயில் நிலையத்தில் இணைப்பு சேவை: செப்டம்பரில் 48,664 பேர் பயணம்

சென்னை, அக். 17: சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் ஷேர் ஆட்டோ, கார், சிருந்து (கேப்ஸ்) இணைப்பு சேவையை நிகழாண்டில் செப்டம்பர் மாதத்தில் மட்டும் 48,664 பேர் பயன்படுத்தியுள்ளனர்.

சென்னையில் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில், முதல் கட்ட மெட்ரோ ரயில் திட்டம் முடிந்து, விமான நிலையம் -வண்ணாரப்பேட்டை வரையும், சென்ட்ரல்-பரங்கிமலை வரையும் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படுகின்றன. இந்த ரயில்களில் தினசரி சராசரி 98 ஆயிரம் பயணிகள் பயணம் செய்கின்றனர்.

இதற்கிடையில், மெட்ரோ ரயில் சேவையைப் பயன்படுத்தும் பயணிகளுக்கான போக்குவரத்து இணைப்பை மேலும் எளிமையாக்கும் வகையில், ஷேர் ஆட்டோ, கார்களை பயன்படுத்த ஷேர் டிரிப் முறை கடந்த ஆண்டு ஆகஸ்ட் 11-ஆம் தேதி அறிமுகப்படுத்தப்பட்டது. கிண்டி, திருமங்கலம், ஆலந்தூர், சின்னமலை, ஈக்காட்டுதாங்கல், கோயம்பேடு, பரங்கிமலை ஆகிய 7 மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து ஷேர் ஆட்டோ சேவையும், எழும்பூர், ஏஜி-டிஎம்எஸ், அண்ணாநகர் கிழக்கு, கோயம்பேடு, ஆலந்தூர், வடபழனி ஆகிய மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து கார் சேவையும் வழங்கப்படுகின்றன. மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து 3 கி.மீ. சுற்றளவில் உள்ள இடங்களுக்கு ஷேர் ஆட்டோக்கள், கார்கள் இயக்கப்படுகின்றன. இதுதவிர, போர்ட் மொபிலிட்டி தயாரித்த செயலி வழியாக சீருந்து இணைப்பு சேவை 11 மெட்ரோ ரயில் நிலையங்களில் செயல்படுத்தப்படுகின்றன. இந்த இணைப்பு சேவை ஒவ்வொரு ரயில் நிலையங்களில் இருந்து 6 கி.மீ. முதல் 8 கி.மீ. வரை செயல்படுத்தப்படுகிறது.

இந்நிலையில், மெட்ரோ ரயில் நிலையத்தில் இருந்து ஷேர் ஆட்டோ, கார், சீருந்து சேவையை கடந்த செப்டம்பர் மாதத்தில் 48,664 பேர் பயன்படுத்தியுள்ளனர். செப்டம்பர் மாதத்தில் , கார் சேவையை 4,957 பேரும், ஷேர் ஆட்டோ சேவையை 36,475 பேரும், சீருந்து இணைப்பு சேவையை 7,232 பேரும் பயன்படுத்தினர். கடந்த ஆண்டு ஆகஸ்ட் 11-ஆம் தேதி முதல் நிகழாண்டில் செப்டம்பர் 30-ஆம் தேதி வரை 5, 34, 869 பேர் பயன்படுத்தியுள்ளனர்.

இது குறித்து மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரி ஒருவர் கூறியது: ஷேர் ஆட்டோ, கார் சேவையை பயன்படுத்துவோர் எண்ணிக்கை மெதுவாக அதிகரித்து வருகிறது. இந்தச் சேவையை ஊக்கப்படுத்தும் விதமாக பல்வேறு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. மெகா கேப்ஸ் நிறுவனத்துடன் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் இணைந்து போர்ட் மொபிலிட்டி தயாரித்த செயலி வழியாக சிறிய வாகன இணைப்புச் சேவையை தொடங்கியது.

இந்த சேவை, சென்னை சென்ட்ரல், அரசினர் தோட்டம், எல்.ஐ.சி., ஆயிரம் விளக்கு, ஏஜி டி.எம்.எஸ்., நந்தனம் உள்பட 11 மெட்ரோ ரயில் நிலையங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. சென்னை மெட்ரோ ரயில் பயண அட்டை மற்றும் செயலி மூலமாக இதற்காக கட்டணம் செலுத்தி பயணிகள் இந்த வசதியை பயன்படுத்தலாம். இந்த வசதி மீதமுள்ள அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களுக்கும் விரிவுபடுத்தப்படும் என்றார் அவர்.